**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்.**

**முன்னிலை : – திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.69/2024**

**(CNR NO: TNVP02-002693-2024)**

(விழுப்புரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருமதி.வி.அகிலா, பி.எல்., எம்.பி.எல், அவர்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண்.44/2021ன் படி 03.05.2024 தேதியில் மேல்விசாரணைக்காக அனுப்பி வைக்க்பபட்டது).

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்<br>கண்டமங்கலம் காவல் நிலைய<br>குற்ற எண்.251/2018 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | **1. ஜனா(எ)சின்ன ஜனா(எ)ஜனார்த்தனன் (வயது 36) த/பெ. அபிமன்னன்**<br>சுடுகாட்டு தெரு, கலிதீர்த்தால்குப்பம், புதுவை.<br><br>**2. கதிரவன் (வயது 32) த/பெ. கோதண்டபாணி**<br>மதகடிப்பட்டு, புதுவை. |
| 3. | சம்பவ நாள் | : | 02.05.2018 |
| 4. | புகார் நாள் | : | 02.05.2018 |
| 5. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 1வது எதிரி 02.05.2018<br>2வது எதிரி 02.05.2018 |
| 6. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 1வது எதிரி 11.08.2018<br>2வது எதிரி 03.07.2018 |
| 7. | எதிரிகள் மீது காவல்நிலையத்தார் குற்றச்சாட்டுக்கள் | : | 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 8. | எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | : | 1, 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 உ/இ.3 of TNPPDL Actன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 9. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 21.01.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 16.04.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Act-ன் கீழ தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் அல்ல. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும், தண்டனையும் | - : | **முடிவாக,** அரசுத்தரப்பு 1, 2 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Act-ன் கீழ் 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>சா.பொ.2 - உருட்டுக்கட்டை-1, சா.பொ.3 - மரக்கைப்பிடியுடன் கூடிய வீச்சருவாள்-1, சா.பொ.4 - உடைந்த கண்ணாடி டீ கிளாஸ் துகள்கள் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்க தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>சா.பொ.1 - PY01BW6199 கிரே கலர் மாருதி ஸ்விப்ட் கார் -1 என்ற வாகனத்தை உரிமையாளர் அதன் உரிய ஆவணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒப்படைக்கும்பட்சத்தில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு உரிமையாளரிடம் ஒப்படைக்க தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதால் தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

இவ்வழக்கு 16.04.2026 இன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.கார்த்திகேயன், அவர்களும், 1, 2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.எஸ்.செந்தில்குமார், அவர்களும், முன்னிலையாகி ஆற்றிய இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

இவ்வழக்கில் 02.05.2018ம் தேதி பகல் 12.00 மணியளவில் 1வது எதிரியான ஜனா(எ)சின்னஜனா(எ)ஜனார்த்தனன் என்பவர் தனது கையில் வீச்சருவாளுடனும் 2வது எதிரியான கதிரவன் என்பவர் தனது கையில் உருட்டு கட்டையுடனும் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே அங்கிருந்த கடைக்காரர்களை பார்த்து மிரட்டி ஏய் ஓத்தா கடைக்கார தேவிடியா பசங்களா நீங்கள் எல்லாம் எங்களுக்கு மாமூல் கொடுக்க வேண்டும் இல்லையெனில் உங்களை தீர்த்து கட்டிவிடுவோம் என்றும், 1வது எதிரி நான் பல கொலைகளை செய்து ஜெயிலுக்கு போனவன் என்று மிரட்டியும், எதிரிகள் இருவரும் அங்கிருந்த டீ கடையின் கண்ணாடி டம்பளர்களை உடைத்து சேதப்படுத்தியும் எதிரிகள் இருவரும் தங்களது கையில் இருந்த ஆயுதங்களை சுழற்றி கொண்டு சென்றபோது அங்கிருந்த பொது ஜனங்கள் பயத்தில் நாளாபக்கமும் சிதறி ஓடியும் கடைக்காரர்கள் பயத்தில் தங்களது கடைகளை மூடிக்கொண்டும் இருந்ததை கேள்விப்பட்டு மேற்படி எதிரிகளை பிடிக்க சென்ற சாட்சி-1ஐ பார்த்து ஏய் போலீஸ்கார தேவிடியா பசங்களா என்னை எவனாவது பிடித்தீங்க என்று சொல்லி

கொண்டு 1வது எதிரி தனது கையில் இருந்த வீச்சருவாளால் சாட்சி-1ன் கழுத்தை பார்த்து ஓத்தா தேவிடியா பையா இதோடு ஒழிந்துபோடா என ஓங்கி வெட்டி கொலை செய்ய முயற்சித்தும் பின்னா் எதிரிகள் இருவரும் தங்களது கைகளில் வைத்திருந்த ஆயுதத்தை காட்டி தங்களை யாராவது பிடிக்க வந்தீங்க இதாலேயே வெட்டி கொலை செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தும், எதிரிகள் இருவரும் சாட்சி 1 முதல் 3 ஆனவா்களை அரசு பணி செய்யவிடாமல் தடுத்து குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரிகள் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 உ/இ.3 of TNPPDL Act படி குற்றம் புரிந்துள்ளாா்கள் என கண்டமங்கலம் காவல்நிலைய காவல் ஆய்வாளா் அவா்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளாா்.

2) மேற்படி குற்ற அறிக்கையை பெற்றுக்கொண்ட விழுப்புரம், நீதித்துறை நடுவா் நீதிமன்றம் எண்.2, அவா்களால் வழக்கை முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.251/2018 ஆக 29.07.2021 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் நகல்கள் யாவற்றையும் குவிமுச பிரிவு 207 படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கியுள்ளாா். பின்னா் அவா் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 உ/இ.3 of TNPPDL Actன் கீழான குற்றம் அமா்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதாக கருதி இந்த வழக்கை குவிமுச பிரிவு 209(அ) பிரிவின்படி மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமா்வு நீதிமன்றத்துக்கு வழக்கு கோப்புகளை சமா்ப்பித்துள்ளாா். மேற்படி வழக்கை பெற்றுக்கொண்ட மாண்புமிகு விழுப்புரம் முதன்மை மாவட்ட அமா்வு நீதிமன்ற நீதிபதி அவா்கள், இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அமா்வு வழக்கு எண்.69/2024 ஆக கோப்பிற்கு எடுத்து மேல்விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

3) வழக்கு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களைக் கேட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 உ/இ.3 of TNPPDL Actன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து,

எதிரிகளிடம் விளக்கிக்கூறி கேட்க எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கை மேல்நடத்தவேண்டும் என்றும் கூறினார்கள்.

4). அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையான ஆவணங்கறும், சா.பொ.1 முதல் சா.பொ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5). அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சான்றுரை வாயிலாக தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் விவரம் பின்வருமாறு...

அ) அ.சா.1 **திரு.பாலமுருகன்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 02.05.2018ம் ஆண்டு கண்டமங்கலம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது அன்றையதினம் 12.00 மணியளவில் கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே 2 நபர்கள் கையில் தடி மற்றும் கத்தியுடன் தகராறு செய்து கொண்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து காவலர் வெங்கடேசன் மற்றும் ராமன் ஆகியோருடன் கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் சொக்கலிங்கம் டீ கடை அருகே சென்றபோது கலிதீர்த்தாள்குப்பத்தை சேர்ந்த ஜனா (எ) சின்னஜனா (எ) ஜனார்த்தனன் மற்றும் அவரது நண்பரான கதிரவன் ஆகியோர் அங்கிருந்த கடைக்காரரிடம் நீங்கள் எல்லாம் மாமூல் தர வேண்டும் என்றும், தரவில்லை என்றால் உங்களை காலி செய்துவிடுவோம் என்று மிரட்டி சொாக்கலிங்கம் டீ கடையிலிருந்த டீ கிளாசை அடித்து நொறுக்கியதாகவும், அதனால் அங்கிருந்த பொதுமக்கள் பயந்து சிதறி ஓடினர் என்றும், இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும், பின்பு தான் பார்ட்டி சகிதம் பிரச்சினை செய்தவர்களை பிடிக்க முற்பட்டபோது ஜனா என்பவர் அதுக்குள்ள போலீஸ்கார தேவிடியா பசங்க வந்துட்டாங்க இவனுங்களை போட்டாதான் தன்னை இனிமே பிடிக்க மாட்டாங்க என்று சொல்லி பிடிக்க முற்பட்ட தன்னை இருடா உன்னை போட்டு தள்றேன், இதோட ஒழிஞ்சிபோடா என்று சொல்லி கையில் வைத்திருந்த கத்தியால் தனது கழுத்து நோக்கி வெட்டினார் என்றும், தான் சுதாரித்து குனிந்துகொள்ள அந்த வெட்டிலிருந்து தப்பியதாகவும், இல்லையென்றால் தான் வெட்டுபட்டு இறந்திருப்பேன் என்றும், போலிஸ் பார்ட்டி கதிரவனை பிடிக்க முற்பட்டபோது அவர் தன் கையில் இருந்த தடியை காட்டி தேவிடியா பசங்களா பிடிச்சிங்கினா அவ்வளவுதான் என்று மிரட்டினார் என்றும், பின்பு கதிரவன் சாம்பல் நிற ஸ்விட்டு காரில்

தப்பி ஓட முற்பட்டவரை மடக்கி பிடித்தனர் என்றும், அப்போது ஜனா கத்தியை காட்டி தன்னை பிடிக்க வந்திங்கன்னா உன்னை காலி பண்ணிடுவேன் என்று மிரட்டி விட்டு கத்தியை தூக்கி போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டார் என்றும், பின்னர் தங்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாலும், பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாலும் தன்மீது கொலை முயற்சி செய்யப்பட்டதாலும், நடந்த சம்பவம் தொடர்பாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் ஆய்வாளரிடம் அன்றையதினம் 13.00 மணிக்கு எழுத்து மூலமான புகார் கொடுத்தேன் என்றும், அந்த புகார் அ.த.சா.ஆ.1 என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) **அ.சா.2. திரு.வெங்கடேசன்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 02.05.2018ம் ஆண்டு கண்டமங்கலம் காவல்நிலையத்தில் காவலராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் காவலர்கள் 1695 திரு.ராமன் ஆகியோர்கள் கண்டமங்கலம் கடை வீதியில் மதகடிப்பட்டு சேர்ந்த ஜனா (எ) சின்னஜனா (எ) ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர்கள் சொக்கலிங்கம் டீ கடை அருகே மாமூல் கேட்டு கடைகளில் பிரச்சினை செய்து வந்தனர் என்றும், உடனே உதவி ஆய்வாளர் பாலமுருகன் அவர்களுக்கு வந்த தகவலின்படி தாங்கள் அங்கு சென்றோம் என்றும், அங்கு ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர் கையில் கத்தி, தடி ஆகியவற்றை வைத்துக்கொண்டு கடையில் மாமூல் கேட்டு டீக்கடையில் இருந்த கண்ணாடி கிளாஸ் உடைத்து பிரச்சினை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தங்களை பார்த்ததும் அசிங்கமாக திட்டி கத்தியால் உதவி ஆய்வாளரை வெட்ட வந்தார் என்றும், அவர் சுதாரித்துக்கொண்டு கீழே குனிந்து கொண்டார் என்றும், பின்னர் அங்கிருந்த PY-01-BW6199 மாருதி ஸ்விப்ட் காரில் தப்பிக்க முயன்றார்கள் என்றும், அவர்களில் கதிரவன் என்பவரை சுற்றி வளைத்து பிடித்துவிட்டோம் என்றும், ஜனார்த்தனன் மட்டும் கத்தியை காட்டி கிட்ட வந்தால் கொன்று தொலைத்துவிடுவேன் என்று மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து தலைமறைவாகி விட்டார் என்றும், தானும் உதவி ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் காவலர் ராமன் ஆகியோர்கள் எதிரி கதிரவன் மற்றும் வழக்கு சொத்தான சிப்ட் காருடன் காவல்நிலையத்திற்கு வந்தோம் என்றும், உதவி ஆய்வாளர் பாலமுருகன் இது சம்பந்தமாக

புகார் கொடுத்தார் என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

இ) **அ.சா.3 திரு.மணிமாறன்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் ஆழியூர் கிராமத்தில வசித்து வருவதாகவும், தான் 2018ம் ஆண்டு தானும், மணிபாலன் என்பவரும் திருபுவனையிலிருந்து பாக்கம் கூட்டுரோடுக்கு சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது போலிசார் அங்கு இருந்தார்கள் என்றும், அப்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்காக ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.2 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) **அ.சா.4 திரு.மணிபாலன்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் ஆழியூர் கிராமத்தில வசித்து வருவதாகவும், தான் 2018ம் ஆண்டு தானும், மணிமாறன் என்பவரும் திருபுவனையிலிருந்து பாக்கம் கூட்டுரோடுக்கு சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது போலிசார் அங்கு இருந்தார்கள் என்றும், அப்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்காக ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.2 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

உ) **அ.சா.5 திரு.ராமன்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 02.05.2018 அன்று கண்டமங்கலம் காவல்நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணியிலிருந்தபோது பகல் 12.00 மணியளவில் தானும் மற்றும் காவலர் வெங்கடேசன் என்பவரும் நிலைய ஆஜரில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவருக்கு கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சொக்கலிங்கம் டீ கடை எதிரில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஜனா(எ)சின்னஜனா (எ) ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர்கள் டீ கடையில் காசு கேட்டு கண்ணாடி டம்பளர்களை உடைத்து சேதப்படுத்தி பிரச்சினை செய்து

கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின்படி தாங்கள் உதவி ஆய்வாளருடன் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம் என்றும், தாங்கள் போய் அங்கே இருந்த எதிரிகள் ஜனா மற்றும் கதிரவன் ஆகியோர்களை பிடிக்க முற்பட்டபோது ஜனா என்பவர் வீச்சருவாளால் உதவி ஆய்வாளரை வெட்ட வரும்போது அவர் சுதாரித்து விலகிக்கொண்டார் என்றும், அப்போது கதிரவன் கட்டையால் உதவி ஆய்வாளரை தாக்கல் வந்தார் என்றும், தாங்கள் இருவரும் வளைந்து பிடிக்க முற்பட்டபோது அருகில் இருந்த கார் பதிவு எண் PY-01-BW6199 மாருதி ஸ்விப்ட் காரில் எதிரி ஜனா என்பவர் கத்தியை காட்டி மிரட்டி ஏறி சென்று தலைமறைவாகிவிட்டார் என்றும், கதிரவனை சம்பவ இடத்தில் மடக்கி பிடித்தோம் என்றும், பிறகு காவல்நிலையம் வந்துவிட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஊ) **அ.சா.6 திரு.பாலாஜி**, தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

எ) **அ.சா.7 திரு.வசந்தகுமார்,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 02.05.2018 அன்று கண்டமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது கலைச்செல்வி என்பவர் தனக்கு உதவியாளராக இருந்தார் என்றும், அன்றையதினம் மதியம் 1.30 மணிக்கு கண்டமங்கலம் உதவி ஆய்வாளர் அழைத்ததன்பேரில் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் சென்றோம் என்றும், அங்கே ஏற்கனவே நடந்த சம்பவத்தில் கத்தி, தடி, மாருதி ஸ்விப்ட் கார் உடைந்த கண்ணாடிகள் ஆகியவைகளை கைப்பற்றுதல் மகசரில் தங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் தான் சாட்சியாக கையெழுத்திட்டேன் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.4 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஏ) அ.சா.8 **திரு.சுரேஷ்பாபு,** தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 02.05.2018ம் தேதி பகல் 1.00 மணிக்கு காவல் ஆய்வாளராக கண்டமங்கலம்

காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.பாலமுருகன் மற்றும் காவலர் 2201 வெங்கடேசன் மற்றும் காவலர் ராமன் 1695 ஆகியோர்கள் ஒரு எதிரியுடன் நிலையம் ஆஜரானார்கள் என்றும், உதவி ஆய்வாளர் தன்னிடத்தில் ஒரு தனி அறிக்கையுடன் எதிரியையும் ஆஜர்படுத்தினார் என்றும், தான் உதவி ஆய்வாளர் கொடுத்த தனி அறிக்கையை பெற்று காவல்நிலைய குற்ற எண்.251/2018, பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 டி.என்.பி.பி.டி. ஆகட்ல் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 பதிவு செய்ததாகவும், அதன் பின்னர் கிராம நிர்வாக அலுவலர் திரு.வசந்தகுமார் மற்றும் கிராம உதவியாளர் திருமதி.கலைச்செல்வி ஆகியோர்களுக்கு போனில் தகவல் சொல்லி சம்பவயிடத்திற்கு வரவழைத்ததாகவும், தான் காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்றதாகவும், சம்பவயிடத்தை பார்வையிட்டதாகவும், சம்பவயிடத்தில் மதியம் 1.30 மணி முதல் 2 மணி வரை சம்பவயிடத்தில் சாட்சிகள் வசந்தகுமார் மற்றும் கலைச்செல்வி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் அ.த.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 தயார் செய்ததாகவும், அதன் பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.4 தயார் செய்து 2 மணி முதல் 2.30 மணிவரையில் சம்பவயிடத்திலிருந்த வழக்கின் சொத்தான் (1). PY-01-BW6199 மாருதி ஸ்விப்ட் கார் ஒன்று (தற்போது காவல்நிலைய பொறுப்பில் உள்ளது) அது சா.பொ.1, (2). சுமார் 96 செ.மீ.நீளமும், சுமார் 3 செ.மீ அகலமும் கொண்ட உருட்டுக்கட்டை ஒன்று சா.பொ.2, (3). மரக்கைப்பிடியுடன் கூடிய சுமார் 72 செ.மீ. நீளமும் சுமார் 13 செ.மீ மர கைப்பிடியுடன் கூடிய வீச்சருவாள் ஒன்று சா.பொ.3, (4) உடைந்த கண்ணாடி டீ கிளாஸ் துகள்கள் 5 எண்ணிக்கை சா.பொ.4 ஆகியவற்றை கைப்பற்றியதாகவும், மேற்படி சம்பவயிட சாட்சியான பாபு மற்றும் பாலாஜி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் தயார் செய்ததாகவும், அதன்பின்னர் உதவி ஆய்வாளர் பாலமுருகன் ஆஜர் செய்த கதிரவன் என்பவரை காவல்நிலையத்தில் கைது செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்ததாகவும், அதன் பின்னர் தலைமறைவு எதிரியை ஜனா(எ)சின்னஜனா என்பவரை தேடிச்சென்றபோது தன்னுடைய ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் அடிப்படையில்

பள்ளிநேலியனூர் ரயில்வே கேட் அருகே பதுங்கி இருந்த எதிரி ஜனா(எ)சின்னஜனா என்பவரை போலீஸ் பார்ட்டி சகிதம் பள்ளிநேலியனூர் ரயில்வேகேட் அருகே சென்றபோது எதிரி தப்பிக்க முயன்றார் என்றும், பள்ளிநேலியனூரிலிருந்து ஆயுரை நோக்கி செல்லும் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருந்தபோது எதிரி தண்டவாளத்திற்கு கீழே விழுந்தார் என்றும், எதிரியின் இடது காலில் அடிப்பட்டு எதிரி ஓட முடியாமல் விழுந்து கிடந்தார் என்றும், தான் போலீஸ் பார்ட்டி சகிதம் அங்கு சென்று எதிரியை தண்டவாளத்திலிருந்து வெளியே தூக்கி வந்து விசாரித்தபோது வழக்கில் சம்பவம் பற்றி கூறியதால் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி என்று எதிரிக்கு தக்க காரணம் கூறி மாலை 4.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்ததாகவும், காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்து மருத்துவ நமூனா எடுத்துவரச்சொன்னதாகவும், எதிரியிடம் விசாரணை செய்தபோது எதிரி ஜனா(எ)சின்னஜனா என்பவர் எவ்வித அச்சுறுத்தலும், ஆசைவார்த்தைகளும் இல்லாமல் தானா முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனை சாட்சிகள் மணிமாறன் மற்றும் மணிபாலன் ஆகியோர்கள் முன்னிலையில் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அதன்பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன்பின்னர் 5.40 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மருத்துவ நமூனா மூலம் எதிரியை மருத்துவ சிகிச்சைக்காக விழுப்புரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று 6.30 மணிக்கு எதிரிக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், அதன்பின்னர் மருத்துவ சிகிச்சை முடிந்து மேற்படி மருத்துவமனையிலிருந்து எதிரியை அழைத்துக்கொண்டு காவல்நிலையத்திற்கு 8.40 மணிக்கு எதிரி சகிதம் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்ததாகவும், அதன்பின்னர் காவல்நிலையத்தில் சாட்சிகள் 1 முதல் 3 வரையிடம் விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரிகளை தக்க வழிகாவல் மூலம் விழுப்புரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் ஆஜர்படுத்தி நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தியதாகவும், அதன் பின் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை பாரம் 95 அ.த.சா.ஆ.8 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து சி.பி. பெற்றதாகவும், இத்துடன் தனது புலன்

விசாரணையை முடித்து எதிரிகள் ஜனா(எ)ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர்கள் மீது பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Actல் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் அ.சா.1, அ.சா.3, அ.சா.6 சாட்சியங்கள் அனைத்தும் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

7). அ.சா.8ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது அந்த சாட்சிய விபரங்களை மறுத்து பொய் சாட்சி என்றும் பொய் வழக்கு என்று கூறி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். அவர்கள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

8). இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பவே தீர்வுக்குரிய பிரச்சினை ஆகும்.

9). <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u>

அரசுத்தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில் 02.05.2018ம் தேதி பகல் 12.00 மணியளவில் 1வது எதிரியான ஜனா(எ)சின்னஜனா(எ)ஜனார்த்தனன் என்பவர் தனது கையில் வீச்சருவாளுடனும் 2வது எதிரியான கதிரவன் என்பவர் தனது கையில் உருட்டு கட்டையுடனும் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகே அங்கிருந்த கடைக்காரர்களை பார்த்து மிரட்டி ஏய் ஓத்தா கடைக்கார

தேவிடியா பசங்களா நீங்கள் எல்லாம் எங்களுக்கு மாமூல் கொடுக்க வேண்டும் இல்லையெனில் உங்களை தீர்த்து கட்டிவிடுவோம் என்றும், 1வது எதிரி நான் பல கொலைகளை செய்து ஜெயிலுக்கு போனவன் என்று மிரட்டியும், எதிரிகள் இருவரும் அங்கிருந்த டீ கடையின் கண்ணாடி டம்பளர்களை உடைத்து சேதப்படுத்தியும் எதிரிகள் இருவரும் தங்களது கையில் இருந்த ஆயுதங்களை சுழற்றி கொண்டு சென்றபோது அங்கிருந்த பொது ஜனங்கள் பயத்தில் நாளாபக்கமும் சிதறி ஓடியும் கடைக்காரர்கள் பயத்தில் தங்களது கடைகளை மூடிக்கொண்டும் இருந்ததை கேள்விப்பட்டு மேற்படி எதிரிகளை பிடிக்க சென்ற அ.சா-1ஐ பார்த்து ஏய் போலீஸ்கார தேவிடியா பசங்களா என்னை எவனாவது பிடித்தீங்க என்று சொல்லி கொண்டு 1வது எதிரி தனது கையில் இருந்த வீச்சருவாளால் அ.சா.1ன் கழுத்தை பார்த்து ஓத்தா தேவிடியா பையா இதோடு ஒழிந்துபோடா என ஓங்கி வெட்டி கொலை செய்ய முயற்சித்தும் பின்னர் எதிரிகள் இருவரும் தங்களது கைகளில் வைத்திருந்த ஆயுதத்தை காட்டி தங்களை யாராவது பிடிக்க வந்தீங்க இதாலேயே வெட்டி கொலை செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்தும், எதிரிகள் இருவரும் சாட்சி 1 முதல் 3 ஆனவர்களை அரசு பணி செய்யவிடாமல் தடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், எனவே 1, 2 எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Actன் கீழ், குற்றம் புரிந்துள்ளார்கள் என வாதிட்டார்.

10). எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் எதிரிகள் மேற்படி செயலை செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

11) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

12). இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு.பாலமுருகன், காவல் ஆய்வாளர் அவர்கள், தனது சாட்சியத்தில் 02.05.2018ம் தேதி கண்டமங்கலம் காவல்நிலைய உதவி ஆய்வாளராக

பணிபுரிந்தபோது பகல் 12.00 மணிக்கு கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே இரண்டு நபர்கள் கையில் கத்தி மற்றும் த டியுடன் தகராறு செய்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்து காவலர் வெங்கடேசன் மற்றும் ர ாமர் ஆகியோருடன் கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே உள்ள சொக்கலிங்கம் டீ கடை அருகே சென்றபோது எதிரி ஜனா(எ)சின்னஜனா என்கிற ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர்கள் அங்கிருந்த கடைக்காரர்களிடம் நீங்கள் எல்லாம் மாமூல் தரவேண்டும் தரவில்லை என்றால் உங்களை காலி செய்துவிடுவோம் என்றும், மிரட்டி சொக்கலிங்கம் டீ கடையில் இருந்த டீ கிளாசை அடித்து நொறுக்கினார்கள் என்றும், அதனால் பொதுமக்கள் சிதறி ஓடினார்கள் என்றும், போக்குவரத்து பாதிக்கப்பட்டது என்றும், அப்போது எதிரியை பிடிக்க சென்றபோது ஆபாசமாக திட்டி கழுத்தை நோக்கி கத்தியால் ஒழிந்துபோடா என்று வெட்டியபோது அவர் சுதாரித்து குனிந்ததால் தப்பித்துக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் மேற்படி அ.சா.1 பாலமுருகன் என்பவருடைய சாட்சியத்தினை உறுதிப்படுத்தும் விதமாக அவரோடு பணிக்கு சென்றதாக சொல்லும் காவலர் வெங்கடேசன் மற்றொரு காவலர் ராமர் ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி சம்பவத்திற்கு கண்ணுற்ற சாட்சிகளாக உள்ள சிறந்த சாட்சிகள் சம்பவயிடத்தில் இருந்த சொக்கலிங்கம் மற்றும் எதிரிகள் மாமூல் கேட்டு அச்சுறுத்தியதால் அச்சுறுத்தலுக்கு ஆளான கடைக்காரர்கள் மேற்படி சிறந்த சாட்சியங்களை புலன் விசாரணை அதிகாரி வழக்கு புலன் விசாரணையின்போது விசாரிக்கவில்லை. அவர்களை சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்காதது அரசுத்தரப்பு வழக்கிற்கு பெரும் பின்னடைவு என்று எதிரிகள் தரப்பு வாதிட்டதில் வலு உள்ளதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13) இருப்பினும், பல்வேறு உச்சநீதிமன்ற தீர்ப்புகள் ஒரு சாட்சி காவல்துறை அதிகாரி என்பதாலேயே அவருடைய சாட்சியத்தினை முழுவதுமாக ஒதுக்கி தள்ளக்கூடாது என்று முன் தீர்ப்புகளாக சொல்லப்பட்டுள்ளன. அதன்வழியில் இந்த வழக்கின் பொருண்மைகளை கவனமாக பரிசீலிக்கையில் மாமூல் கேட்டு மிரட்டியதாக டீ கடை நடத்திவரும் சொக்கலிங்கம் என்பவரோ அல்லது வேறு கடை நடத்தி வருபவர்களோ இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. தகவலாளி கொடுத்த தகவல் மூலம் காவல்துறையினருக்கு தெரியவந்திருந்தாலும் பின்னிட்டு

புலன்விசாரணையில் எதிரிகள் மாமூல் கேட்டு சொக்கலிங்கம் என்பவர் உள்ளிட்ட கடைகாரர்களை மிரட்டினார்கள் என்ற பொருன்மையை நிரூபிக்க சாட்சியாக விசாரித்திருக்கவேண்டும். அவர்கள் சாட்சியாகவும் விசாரிக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையில் தனி நபர்கள் மூலம் உறுதியூட்டம் செய்யப்படாத அ.சா,1, அ.சா.2, அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியம் நீதிமன்ற நம்பிக்கையினை பெறவில்லை. மேலும் எதிரி ஜனார்த்தனன் என்பவருடைய ஒப்புதல் வாக்குமூலம் தனிநபர் சாட்சிகள் மூலம் நிரூபனம் செய்யப்படவில்லை.

14) அ.சா.3 மற்றும் அ.சா.4 அரசத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். மேலும் சம்பவத்தின்போது பஸ் ஸ்டாப் அருகே நின்றுகொண்டிருந்த பாலாஜி என்பவர் அ.சா.6 ஆக விசாரித்தபோது அவர் சம்பவம் பற்றி தெரியாது என்று பிறழ் சாட்சியாகியுள்ளார்.

15) இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ்பாபு என்பவர் 02.05.2018 அன்று பகல் 1.30 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அதன்பிறகு கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.4 மூலம் சா.பொ.1 முதல் சா.பொ.3 மற்றும் சா.பொ.4 ஆகியவற்றை சம்பவயிடத்தில் கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருந்த அ.சா.7 வசந்தகுமார் என்பவர் அவரது சாட்சியத்தில் 02.05.2018 அன்று கண்டமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது அவரது உதவியாளரான கலைச்செல்வி என்பவருடன் மதியம் 1.30 மணிக்கு கண்டமங்கலம் உதவி ஆய்வாளர் அழைத்ததன்பேரில் கண்டமங்கலம் பேருந்து நிறுத்தம் சென்று அங்கே ஏற்கனவே நடந்த சம்பவத்தில் கத்தி, தடி மாருதி ஸ்விப்ட் கார், உடைந்த கண்ணாடிகள் ஆகியவைகளை அவர்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசரில் அவர் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும், அந்த கைப்பற்றுதல் மகசர் தான் அத.சா.ஆ.4 என்றும், சாட்சியம் அளித்துள்ளவர், அவரது குறுக்கு விசாரணையில் அவர் கையெழுத்திட்டதாக சொல்லும் கைப்பற்றுதல் மகசர் காவல்நிலையத்தில் வைத்துதான் தயார்

செய்யப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 அவருடைய குறுக்கு விசாரணையில் மதியம் 1.30 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அதன்பிறகு அந்த சம்பவயிடத்தில் கிடந்த சான்று பொருட்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் சாட்சியம் அளித்துள்ள அ.சா.8 அவரது குறுக்கு விசாரணையில் வரைபடம் அ.த.சா.ஆ.7 அவர் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்றுபொருட்கள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளது முரண்பாடாக அமைந்துள்ளது. மேற்படி அ.சா.7ன் சாட்சியத்தின்படி சான்றுபொருட்கள் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.4 மூலம் சம்பவயிடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதா அல்லது காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது. உண்மையில் சான்றுபொருட்கள் சம்பவயிடத்தில் இருந்திருந்தால் வரைபடம் அ.த.சா.ஆ.7 தயார் செய்தபோது புலன்விசாரணை அதிகாரி அதனை வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டியிருக்க முடியும். அவ்வாறு காட்டப்படவில்லை என்பது சம்பவயிடத்தில் சான்று பொருட்கள் இல்லை என்பதனையே காட்டுகிறது. இந்த வழக்கில் இரகசிய தகவலின் அடிப்படையில் சொக்கலிங்கம் உள்ளிட்ட கடைக்காரர்கள்தான் எதிரிகள் தடி, கத்தி ஆகியவைகளை காட்டி மிரட்டி மாமூல் கேட்டதாக சொல்லும் பொருன்மையிலிருந்து உண்மையில் பாதிக்கப்பட்ட நபர்கள் சொக்கலிங்கம் உள்ளிட்ட அந்த கடை நடத்தி வருபவர்கள்தான் அவர்கள் தரப்பில் எழுத்துமூலமான அல்லது வாய்மொழியான புகார் எதுவும் கொடுக்கப்படாததும் புலன் விசாரணையில் அவர்களை சாட்சியாக விசாரித்து நீதிமன்றத்தில் அவர்களை சாட்சியாக விசாரிக்க தவறியது அ.சா.1, அ.சா2 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியத்தினை உறுதியூட்டுவதாக அமையவில்லை என்பதால் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக எதிரான அனுமானம் தான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114(g) ன் கீழ் எழுகிறது.

16) உண்மையில் எதிரிகள் 02.05.2018 அன்று பகல் 12.00 மணிக்கு கண்டமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே சொக்கலிங்கம் உள்ளிட்ட கடைக்காரர்களை மிரட்டி மாமூல் கேட்டார்களா

என்பதும் அதனை அடுத்து அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் சம்பவயிடம் சென்று அவரது அரசபணியாக எதிரிகளை பிடிக்க முற்பட்டாரா என்பதும், அப்போது எதிரி ஜனா என்பவர் ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கத்தியால் அ.சா.1ஐ வெட்ட முயன்றாரா என்பதும், அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தாரா என்பதும் சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது. மேலே கண்ட காரணங்களால் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபனம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து எதிரிகளை விடுவிப்பதே நீதியின்பால் சரியானது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** அரசுத்தரப்பு 1, 2 எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான 294(பி), 384, 353, 506(2), 307 இதச உ/இ.3 of TNPPDL Act-ன் கீழ் 1, 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

சா.பொ.2 - உருட்டுக்கட்டை-1, சா.பொ.3 - மரக்கைப்பிடியுடன் கூடிய வீச்சருவாள்-1, சா.பொ.4 - உடைந்த கண்ணாடி டீ கிளாஸ் துகள்கள் ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்க தீர்ப்பளிக்கப்படுகிறது.

சா.பொ.1 - PY01BW6199 கிரே கலர் மாருதி ஸ்விப்ட் கார் -1 என்ற வாகனத்தை உரிமையாளர் அதன் உரிய ஆவணங்கள் ஒப்படைக்கும்பட்சத்தில் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு உரிமையாளரிடம் ஒப்படைக்க தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் விசாரணை காலத்தில் எழுதி கொடுத்திருந்த ஜாமின் பத்திரத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. அதன் விளைவாக ஜாமின்தாரர்கள் விடுவிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

கு.வி.மு.ச பிரிவு 437 - A தேவைக்கேற்ப புதிய ஜாமின் பத்திரத்தை ரூ.10,000/-க்கு நிறைவேற்றுமாறு குற்றம் சாட்டப்பட்ட எதிரி இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

கு.வி.மு.ச. பிரிவு 437 - Aன் படி குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளிடம் இருந்த தனிப்பட்ட பத்திரத்தை (Personal bond) பெறுமாறு இந்த நீதிமன்ற அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது. அந்த தனிப்பட்ட பத்திரம் (Personal bond) 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய தீர்ப்பு பகரப்பட்டது.

A TAMILSELVAN Digitally signed by A TAMILSELVAN Date: 2026.04.24 18:27:34 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பாலமுருகன் த/பெ. வெங்கடேசன் |
| அ.சா.2 | திரு. வெங்கடேசன் த/பெ. ஆதிசிவன் |
| அ.சா.3 | திரு. மணிமாறன் த/பெ. சேகர் |
| அ.சா.4 | திரு. மணிபாலன் த/பெ. ராஜேந்திரன் |
| அ.சா.5 | திரு. ராமன் த/பெ. பரசுராமன் |
| அ.சா.6 | திரு. பாலாஜி த/பெ. ஆறுமுகம் |
| அ.சா.7 | திரு. வசந்தகுமார் த/பெ. லோகநாதன் |
| அ.சா.8 | திரு. சுரேஷ்பாபு த/பெ. துரைராஜ் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.த.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.6 | பார்வை மகசர் |
| அ.த.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.8 | பாரம் 95 |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்: -</u>**

சா.பொ.1 - PY01BW6199 கிரே கலர் மாருதி ஸ்விப்ட் கார் -1
சா.பொ.2 - உருட்டுக்கட்டை-1
சா.பொ.3 - மரக்கைப்பிடியுடன் கூடிய வீச்சருவாள்-1
சா.பொ.4 - உடைந்த கண்ணாடி டீ கிளாஸ் துகள்கள்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்:-</u>**

இல்லை.

A TAMILSELVAN

Digitally signed by A TAMILSELVAN
Date: 2026.04.24 18:27:42 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
விழுப்புரம்.